©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 11.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 488A] சென்னை, செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 18, 2022
ஐப்பசி 1, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| **சட்டமுன்வடிவுகள்:** | |
| எண். 47/2022—தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டம் .. .. .. .. | 2–6 |
| எண். 48/2022—தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. | 7–14 |
| எண். 49/2022—தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. .. | 15–18 |
| எண். 50/2022—தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் .. | 19–20 |
| எண். 51/2022—தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் (திருத்தச்) சட்டம் .. .. .. | 21–24 |
| எண். 52/2022—தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம் .. .. | 25–28 |

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 47/2022**

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

3–UU எனும் புதிய பிரிவினை உட்புகுத்தல்.

2. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 3–U ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் V/1920.

"**3–UU. குறித்த சில நேர்வுகளில் பேரூராட்சிக்கு தனி அலுவலரை நியமனம் செய்தல்.–** இந்தச் சட்டம் அல்லது தற்போதைக்கு நடைமுறையிலுள்ள பிறச் சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எவ்வாறிருப்பினும், தேர்தல் செயல்முறைக்கு வழிமுறை செய்த பின்பும், 2022 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் தேதியன்று அமைத்துருவாக்க இயலாத தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடம்பூர் பேரூராட்சியினை பொறுத்தவரையில், மாநில அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, பேரூராட்சிக்கான சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் மன்றக் கூட்டம் நடைபெறும் நாள் வரை, அல்லது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை, இதில் எது முந்தையதோ அது வரை, கூறப்பட்ட பேரூராட்சியின் அதிகாரங்களைச் செயலுறுத்துவதற்கும் செயற்பணிகளைச் செய்து முடிப்பதற்கும் தனி அலுவலர் ஒருவரை நியமனம் செய்யலாம்.".

நீக்கறவு மற்றும் காப்புரை.

3. (1) 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2022.

(2) அத்தகைய நீக்கறவு இருந்த போதிலும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவறான, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான கூறப்பட்ட சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாக கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாடு சட்டம் V/1920.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 2016 அக்டோபர் திங்கள் 4 ஆம் தேதியிட்ட நீதிப்பேராணை மனு எண். 33984/2016 இன் ஆணைக்கிணங்கி பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தனி அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டனர். பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் கூறப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலமானது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது மற்றும் இறுதியாக 2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

2. பின்னர், மாநிலத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அதாவது 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளுக்கு சாதாரண தேர்தல்களானது 19.02.2022 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடம்பூர் பேரூராட்சி தவிர்த்து கூறப்பட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல்களானது நடத்தப்பட்டது.

3. தேர்தல் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் அலுவலர்களால் 05.02.2022 அன்று வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்ட நாளில், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்) விதிகளின் வகைமுறைகள் பின்பற்றப்படாததால், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடம்பூர் பேரூராட்சியின் தொடர்புடைய அனைத்து சிற்றொகுதிகளிலும் தேர்தல் ரத்து செய்யப்பட்டதாக அரசின் கவனத்திற்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையமானது கொண்டு சென்றது. மேலும், சென்னை உயர் நீதிமன்றமானது, நீதிப்பேராணை மனு (MD) எண்கள். 3131, 3132 மற்றும் 3133/2022 இன் 27.04.2022 ஆம் தேதியிட்ட ஆணையின் மூலம் ஆணையம் மற்றும் பிற எதிர் மனுதாரர்கள் 14.06.2022 வரை, கூறப்பட்ட பேரூராட்சியின் சிற்றொகுதி உறுப்பினர்களின் பதவிக்கு தேர்தல் நடத்துவதைத் தடை செய்தது.

4. மாண்பமை உயர்நீதிமன்றத்தின் ஆணையினைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையமானது, 30.06.2022 அன்று கூறப்பட்ட கடம்பூர் பேரூராட்சியின் தனி அலுவலரின் பதவிக் காலமானது முடிவதற்கு முன்னர் தூத்துக்குடி மாவட்டத்தின் கடம்பூர் பேரூராட்சியின் சிற்றொகுதி உறுப்பினர்களின் பதவிக்கு தேர்தலை நடத்தும் நிலையில் இல்லை.

5. கூறப்பட்ட சூழ்நிலையில், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் V/1920) தக்கவாறு திருத்தம் செய்வதன் மூலம் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடம்பூர் பேரூராட்சியின் தனி அலுவலரின் பதவிக் காலத்தை 01.07.2022 முதல் 31.12.2022 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு அல்லது அந்தப் பேரூராட்சியின் சாதாரண தேர்தலுக்கு பின்னர் நடத்தப்படும் மன்றத்தின் முதல் கூட்டம் நடைபெறும் நாள் வரை, இவற்றில் எது முந்தையதோ, அது வரையில் நீட்டிப்பதென அரசானது முடிவு செய்தது.

6. அதற்கிணங்கிய வகையில், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2022) 2022 ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் நாள் அன்று மாண்புமிகு ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது, 2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

7. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்கூறப்பட்ட அவசரச் சட்டத்தை மாற்றி அமைக்க விழைகிறது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

**2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2022) பிறப்பிக்கப்பட்டதைத் தேவையானதாக்கிய சூழ்நிலைகளை விளக்குகின்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 168 ஆம் விதியின்படியான விவர அறிக்கை.**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 2016 அக்டோபர் திங்கள் 4 ஆம் தேதியிட்ட நீதிப்பேராணை மனு எண். 33984/2016–இன் ஆணைக்கிணங்கி பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தனி அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டனர். பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் கூறப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலமானது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது மற்றும் இறுதியாக 2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

2. பின்னர், மாநிலத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அதாவது 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளுக்கு சாதாரண தேர்தல்களானது 19.02.2022 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடம்பூர் பேரூராட்சி தவிர்த்து கூறப்பட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல்களானது நடத்தப்பட்டது.

3. தேர்தல் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் அலுவலர்களால் 05.02.2022 அன்று வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்ட நாளில், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்) விதிகளின் வகைமுறைகள் பின்பற்றப்படாததால், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடம்பூர் பேரூராட்சியின் தொடர்புடைய அனைத்து சிற்றொகுதிகளிலும் தேர்தல் ரத்து செய்யப்பட்டதாக அரசின் கவனத்திற்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் கொண்டு வரப்பட்டது. மேலும், சென்னை உயர் நீதிமன்றமானது, நீதிப்பேராணை மனு (MD) எண்கள். 3131, 3132 மற்றும் 3133/2022 இன் 27.04.2022 ஆம் தேதியிட்ட ஆணையின் மூலம் ஆணையம் மற்றும் பிற பிரதிவாதிகள் 14.06.2022 வரை கூறப்பட்ட பேரூராட்சியின் சிற்றொகுதி உறுப்பினர்களின் பதவிக்கு தேர்தல் நடத்துவதைத் தடை செய்தது.

4. மாண்பமை உயர்நீதிமன்றத்தின் ஆணையினைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையமானது, 30.06.2022 அன்று கூறப்பட்ட கடம்பூர் பேரூராட்சியின் தனி அலுவலரின் பதவிக் காலமானது முடிவதற்கு முன்னர் தூத்துக்குடி மாவட்டத்தின் கடம்பூர் பேரூராட்சியின் சிற்றொகுதி உறுப்பினர்களின் பதவிக்கு தேர்தலை நடத்தும் நிலையில் இல்லை.

5. கூறப்பட்ட சூழ்நிலையில், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் V/1920) தக்கவாறு திருத்தம் செய்வதன் மூலம் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடம்பூர் பேரூராட்சியின் தனி அலுவலரின் பதவிக் காலத்தை 01.07.2022 முதல் 31.12.2022 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு அல்லது அந்தப் பேரூராட்சியின் சாதாரண தேர்தலுக்குப் பின்னர் நடத்தப்படும் மன்றத்தின் முதல் கூட்டம் நடைபெறும் நாள் வரை, இவற்றில் எது முந்தையதோ, அது வரையில் நீட்டிப்பதென அரசானது முடிவு செய்துள்ளது.

6. அப்போது, சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாமல் இருந்த காரணத்தினால், அரசின் மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பிப்பது தேவையானதாயிற்று. அதற்கிணங்கிய வகையில், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2022), 2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்டமுன்வடிவின் 2 ஆம் கூறின் மூலம், 3–UU பிரிவினை, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் V/1920) உட்புகுத்துவதற்கு முன்மொழியப்பட்டது, அது தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கடம்பூர் பேரூராட்சிக்கு தனி அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கான அறிவிக்கையை வெளியிடுவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரம் இயல்பானதே அன்றி தனித்தன்மை வாய்ந்தது அல்ல.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 18.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 48/2022**

**தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**பகுதி–I.**

**முன்னுரை**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி–II.**

**1965–ஆம் ஆண்டு மதுரை–காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 33/1965.

10ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1965ஆம் ஆண்டுச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1965–ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

19ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

3. 1965 ஆம் ஆண்டு சட்டத்தின் 19ஆம் பிரிவில்,–

(1) (a) கூறில், ''வகை I– பதவி வழி உறுப்பினர்கள்,'', எனும் தலைப்பின் கீழ்,–

(i) (1) ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (1–AAA) இனமானது, (1–AAAA) இனமாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1–AAAA) இனத்திற்கு முன்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(1–AAA) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;'';

(2) (aa) கூறில்,–

(i) ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

## பகுதி—III.

### 1978ஆம் அண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

17ஆம் பிரிவிற்கானத் திருத்தம். தமிழ்நாடு சட்டம் 30/1978.

4. 1978—ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் 17—ஆம் பிரிவில்,—

(1) (2) — ஆம் உட்பிரிவில், ''வகை I— பதவி வழி உறுப்பினர்கள்,'', எனும் தலைப்பின் கீழ், (d) இனத்திற்குப் பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(dd) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்:'';

(2) (4)ஆம் உட்பிரிவில், (i) கூறில், ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

## பகுதி—IV.

### 1981ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

11ஆம் பிரிவிற்கானத் திருத்தம். தமிழ்நாடு சட்டம் 1/1982.

5. (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 1/1982 என குறிப்பிடப்படுவதான) 1981—ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

24—ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

6. தமிழ்நாடு சட்டம் 1/1982—இன், 24ஆம் பிரிவில்,—

(1) (b) கூறில், ''வகை I— பதவி வழி உறுப்பினர்கள்.'' எனும் தலைப்பின் கீழ்,—

(i) (1)ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (1—AA) இனத்திற்குப் பின்பு. பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(1—AAA) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;'';

(2) (d) கூறில்,—

(i) ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

32ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

7. தமிழ்நாடு சட்டம் 1/1982—இன், 32ஆம் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில், (iii) ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

பகுதி—V.

**1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 2/1982.

11ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**8.** (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 2/1982 என குறிப்பிடப்படுவதான) 1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

24ஆம் பிரிவிற்கானத் திருத்தம்

**9.** தமிழ்நாடு சட்டம் 2/1982—இன் 24—ஆம் பிரிவில்,—

(1) (b) கூறில், ''வகை I—பதவி வழி உறுப்பினர்கள்.'', எனும் தலைப்பின் கீழ்,—

(i) (1) ஆம் இனத்தில் ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (1—AA) இனத்திற்குப் பின்பு. பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(1—AAA) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;'';

(2) (d) கூறில், —

(i) ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

32ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**10.** தமிழ்நாடு சட்டம் 2/1982—இன், 32 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (iii) ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

பகுதி—VI.

**1984ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 15/1984.

11ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**11.** (இதன்பின்பு, இந்தப் பகுதியில் 1984 ஆம் ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

20ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**12.** 1984ஆம் சட்டத்தின் 20 ஆம் பிரிவில்,

(1) (a)—கூறில், ''வகை I— பதவி வழி உறுப்பினர்கள்.'', எனும் தலைப்பின் கீழ், (4)—ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (b) கூறில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

23 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**13.** 1984—ஆம் ஆண்டு சட்டத்தின் 23—ஆம் பிரிவில்,—

(1) (b) கூறில், "வகை I— பதவி வழி உறுப்பினர்கள்.", எனும் தலைப்பின் கீழ், (1)—ஆம் இனத்தில், "கல்வி" எனும் சொற்றொடருக்காக, "உயர்கல்வி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (d) கூறில், "கல்வி" எனும் சொற்றொடருக்காக, "உயர்கல்வி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

31ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**14.** 1984ஆம் ஆண்டு சட்டத்தின் 31—ஆம் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில், (c) இனத்தில், "கல்வி" எனும் சொற்றொடருக்காக, "உயர்கல்வி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி—VII.

## 1985—ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

12ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**15.** (இதன்பின்பு இந்தப் பகுதியில், 1985 ஆம் ஆண்டுச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1985—ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், "கல்வி" எனும் சொற்றொடருக்காக, "உயர்கல்வி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 23/1985.

21ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**16.** 1985ஆம் ஆண்டுச் சட்டத்தின் 21—ஆம் பிரிவில்,—

(1) (a) கூறில், "வகை I— பதவி வழி உறுப்பினர்கள்.", எனும் தலைப்பின் கீழ், (4) ஆம் இனத்தில் "கல்வி" எனும் சொற்றொடருக்காக, "உயர்கல்வி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (b) கூறில், (i) ஆம் உட்கூறில், "கல்வி" எனும் சொற்றொடருக்காக, "உயர்கல்வி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

25ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**17.** 1985—ஆம் ஆண்டுச் சட்டத்தின் 25—ஆம் பிரிவில்,—

(1) (b) கூறில், "வகை II— பதவி வழி உறுப்பினர்கள்.", எனும் தலைப்பின் கீழ்,—

(i) (1)ஆம் இனத்தில், "கல்வி" எனும் சொற்றொடருக்காக, "உயர்கல்வி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (2—A) இனத்திற்குப் பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2—AA) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;";

(2) (d) கூறில், (i) ஆம் உட்கூறில்,—

(i) "கல்வி" எனும் சொற்றொடருக்காக, "உயர்கல்வி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) "சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்" எனும் சொற்றொடருக்கு பின்பு, "அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

18. 1985—ஆம் ஆண்டு சட்டத்தின் 33 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (iii) ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 33 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்

## பகுதி—VIII.

### 1990ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 31/1990.

19. (இதன்பின்பு, இந்தப் பகுதியில் 1990ஆம் ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1990—ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 10ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

20. 1990ஆம் ஆண்டு சட்டத்தின் 23ஆம் பிரிவில்,— 23ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) (b) கூறில், ''வகை I— பதவி வழி உறுப்பினர்கள்.'', எனும் தலைப்பின் கீழ்,—

(i) (1)ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (3)ஆம் இனத்திற்குப் பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(3—A) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;'';

(2) (d) கூறில்,—

(i) ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

21. 1990ஆம் ஆண்டு சட்டத்தின் 31ஆம் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில், (iii)—ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 31ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

## பகுதி—IX.

### 1997ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 45/1997.

22. (இதன்பின்பு, இந்தப் பகுதியில் 1997ஆம் ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1997—ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 11ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

24ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

23. 1997ஆம் ஆண்டு சட்டத்தின் 24–ஆம் பிரிவில்,–

(1) (b) கூறில், ''வகை I – பதவி வழி உறுப்பினர்கள்'', எனும் தலைப்பின் கீழ், (3)–ஆம் இனத்திற்கு பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(3–A) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;'';

(2) (d) கூறில், ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

## பகுதி–X.

## 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

9ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

24. (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 27/2002 என குறிப்பிடப்படுவதான) 2002–ஆம் ஆண்டு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/2002.

20ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

25. தமிழ்நாடு சட்டம் 27/2002–இன் 20ஆம் பிரிவில்,–

(1) (2)–ஆம் உட்பிரிவில், ''வகை I – பதவி வழி உறுப்பினர்கள்.'', எனும் தலைப்பின் கீழ், (a) இனத்திற்கு பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(aa) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;'';

(2) (2)–ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(2–A) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளரானவர், காரணம் எதற்காகவும் ஆட்சிக் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாதிருக்கும் நேர்வில், அவர், கூட்டங்களில் கலந்துகொள்ள அரசு துணைச் செயலாளரின் படிநிலைக்கு குறையாத, அவரது துறையின் அலுவலர் எவரையும் மாற்றாக அனுப்பலாம். அவ்வாறு மாற்றியனுப்பப்பட்ட அலுவலரானவர் கூட்டத்தின் விவாதங்களில் கலந்து கொள்ள உரிமை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் வாக்களிக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்''.

## பகுதி–XI.

## 2002ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

11–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

26. (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 32/2002 என குறிப்பிடப்படுவதான) 2002–ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொற்றொடருக்காக, ''உயர்கல்வி'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2002.

27. தமிழ்நாடு சட்டம் 32/2002–இன், 23ஆம் பிரிவில்,– 23–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) (b)கூறில், (1)ஆம் இனத்திற்கு பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1–A) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;";

(2)(c) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(cc) நிதித்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளரானவர், காரணம் எதற்காகவும் ஆட்சிக் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாதிருக்கும் நேர்வில், அவர், கூட்டங்களில் கலந்துகொள்ள அரசு துணைச் செயலாளரின் படிநிலைக்கு குறையாத அவரது துறையின் அலுவலர் எவரையும் மாற்றாக அனுப்பலாம். அவ்வாறு மாற்றியனுப்பப்பட்ட அலுவலரானவர் கூட்டத்தின் விவாதங்களில் கலந்து கொள்ள உரிமை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் வாக்களிக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்".

## பகுதி–XII.

### 2013ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 20/2013.

28. 2013ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தின் 19–ஆம் பிரிவில்,– 19ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) (2)ஆம் உட்பிரிவில், "வகை I – பதவி வழி உறுப்பினர்கள்", எனும் தலைப்பின் கீழ், (c) இனத்திற்கு பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(cc) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;";

(2) (4)ஆம் உட்பிரிவில், (a) கூறில் "சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்" எனும் சொற்றொடருக்கு பின்பு, "அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

அரசு தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ், 21.12.2021 அன்று நடைபெற்ற உயர்கல்வித் துறையின் மறுஆய்வுக் கூட்டத்தில், பல்கலைக்கழக நிலை விதிகளில் தேவையான திருத்தத்தைக் கொண்டு வருவதன் மூலம், பல்கலைக்கழகங்கள் அனைத்திலும், நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளரை, ஆட்சிக்குழு உறுப்பினர்களுள் ஒருவராக சேர்க்க முடிவு செய்யப்பட்டது.

2. எனவே அரசானது, மேற்சொன்ன நோக்கத்திற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகச் சட்டங்களை திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது. அவையாவன:—

(i) 1965ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1965);

(ii) 1978ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1978);

(iii) 1981ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1982);

(iv) 1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1982);

(v) 1985ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/1985);

(vi) 1990ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1990);

(vii) 1997ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1997);

(viii) 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2002);

(ix) 2002ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2002); மற்றும்

(x) 2013ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2013).

மேலும் மேற்சொன்ன பல்கலைக்கழகங்கள், தற்போது, உயர்கல்வித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால், மேலே கூறப்பட்ட பல்கலைக்கழகச் சட்டங்கள் மற்றும் 1984ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 15/1984) குறித்த சில விளைவு சார் திருத்தங்களானவை மேலும் முன் மொழியப்பட்டுள்ளன.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் க. பொன்முடி,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 18.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 49/2022**

**தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

பகுதி – I.

**முன்னுரை.**

1. (1) இந்தச் சட்டம் 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பகுதி – II.

**1965ஆம் ஆண்டு மதுரை—காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 33/1965.

2. (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1965ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1965ஆம் ஆண்டு மதுரை—காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (*a*) கூறில், ''காது கேளாத – வாய் பேச இயலாதவர் அல்லது தொழுநோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 6ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. 1965ஆம் ஆண்டு சட்டத்தின் 43ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 43ஆம் பிரிவிற்கான திருத்தம்.

பகுதி – III.

**1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 1/1982.

4. (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 1/1982 எனக் குறிப்பிடப்படுவதான) 1981ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில், (*a*) கூறில், ''காது கேளாத – வாய் பேச இயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 6ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. தமிழ்நாடு சட்டம் 1/1982இன் 49ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 49ஆம் பிரிவிற்கான திருத்தம்.

## பகுதி – IV.

### 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

6–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 2/1982.

**6.** (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 2/1982 எனக் குறிப்பிடப்படுவதான) 1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6ஆம் பிரிவில், **(1)** ஆம் உட்பிரிவில், (*a*) கூறில், ''காது கேளாத – வாய் பேச இயலாதவர் அல்லது தொழுநோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

49ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** தமிழ்நாடு சட்டம் 2/1982இன் 49ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி – V.

### 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

6ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 15/1984.

**8.** (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1984ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1984ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6ஆம் பிரிவில், **(1)**ஆம் உட்பிரிவில், (*a*) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேசஇயலாதவர் அல்லது தொழுநோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

41ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**9.** 1984ஆம் ஆண்டு சட்டத்தின் 41ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி – VI.

### 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

7ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 23/1985.

**10.** (இதன்பின்பு இந்தப் பகுதியில், 1985ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1985ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் 7 ஆம் பிரிவில், **(1)** ஆம் உட்பிரிவில், (*a*) கூறில், ''காது கேளாத – வாய் பேச இயலாதவர் அல்லது தொழுநோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

55ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**11.** 1985ஆம் ஆண்டுச் சட்டத்தின் 55ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர் அல்லது தொழு நோயால் துன்புறுபவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

## பகுதி – VII.

### 1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

6ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 31/1990.

**12.** (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1990ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1990ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6ஆம் பிரிவில், **(1)**ஆம் உட்பிரிவில், (*a*) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

49ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**13.** 1990ஆம் ஆண்டு சட்டத்தின் 49ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

பகுதி – VIII.

**1997ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 45/1997.

6ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**14.** (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1997ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1997ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

50ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**15.** 1997ஆம் ஆண்டு சட்டத்தின் 50ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

பகுதி – IX.

**2002ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 27/2002.

18ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**16.** (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 27/2002 எனக் குறிப்பிடப்படுவதான) 2002ஆம் ஆண்டு திறந்த நிலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

50ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**17.** தமிழ்நாடு சட்டம் 27/2002இன் 50ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

பகுதி – X.

**2002ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 32/2002.

6ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**18.** (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 32/2002 எனக் குறிப்பிடப்படுவதான) 2002ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

49ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**19.** தமிழ்நாடு சட்டம் 32/2002இன் 49ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர் '' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

பகுதி – XI.

**2008ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 33/2008.

17ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**20.** (இதன்பின்பு இந்தப் பகுதியில் 2008ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 17ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

47ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**21.** 2008ஆம் ஆண்டு சட்டத்தின் 47ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில், ''அல்லது காது கேளாத – வாய் பேச இயலாதவர்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள், தொழுநோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கெதிராக, பாகுபாட்டினைக் கொண்டுள்ள சட்டங்களைத் திருத்தம் செய்யக் கோரினார். இதே கோரிக்கையினை புதுடெல்லியில் உள்ள இந்திய தொழுநோய் அறக்கட்டளையும் அரசிடம் கோரியது.

2. மேலும், 2016ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் (மையச் சட்டம் 49/2016) 3ஆம் பிரிவின்படி, மாற்றுத்திறனாளிகள் மற்றவர்களுடன் சமமான சமத்துவ உரிமையை, கண்ணியமான வாழ்க்கையை மற்றும் அவர்களது நாணயத்திற்கான மதிப்பினை அனுபவிப்பதை அரசானது உறுதி செய்தல் வேண்டும் மற்றும் ஆட்சேபிக்கப்பட்ட செயல் அல்லது செய்யாமையானது சட்டப்பூர்வமான குறிக்கோள் ஒன்றை அடைவதற்கு அவசியமான வழிமுறை என்று காண்பிக்கப்பட்டாலன்றி மாற்றுத்திறனாளிகள் எவரும் இயலாமையின் காரணத்தினால் பாகுபடுத்தப்படுதல் கூடாது.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகச் சட்டங்களானது, அந்தப் பல்கலைக்கழகங்களின் அதிகார அமைப்புகள் எதனின் உறுப்பினராக தேர்ந்தெடுப்பதற்காக அல்லது நியமிப்பதற்காக, காது கேளாத—வாய் பேச இயலாத அல்லது தொழுநோயால் துன்புறும் நபர் எவரையும் தகுதியற்றவராக்குகிறது. மேலும், அவர் காதுகேளாத— வாய் பேச இயலாத அல்லது தொழுநோயால் துன்புறுபவர்களானால், பல்கலைக்கழகங்களின் அதிகார அமைப்புகள் எதனின் உறுப்பாண்மையிலிருக்கும் நபர் எவரையும் நீக்குவதற்கு, நேர்விற்கேற்ப அந்தப் பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழு அல்லது ஆட்சிப் பேரவை அல்லது செயலாட்சி மன்றத்தைக் கூறப்பட்ட சட்டமானது மேலும் இயலச்செய்கிறது:—

(i) 1965ஆம் ஆண்டு மதுரை - காமராசர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1965);

(ii) 1981ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1982);

(iii) 1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1982);

(iv) 1984ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1984);

(v) 1985ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/1985);

(vi) 1990ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1990);

(vii) 1997ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1997);

(viii) 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2002);

(ix) 2002ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2002); மற்றும்

(x) 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/2008).

4. எனவே, பல்கலைக்கழகங்களின் அதிகார அமைப்புகள் எதனிலும் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமிப்பதற்கு உள்ள மேற்கூறப்பட்ட தகுதியின்மைகளை நீக்குவதற்காக, மேற்கூறப்பட்ட சட்டங்களை தக்கவாறு திருத்துவதென அரசானது முடிவு செய்துள்ளது.

5. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் க. பொன்முடி,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 18.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 50/2022**

**1976ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, 2019ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

குடியரசுத் தலைவருடைய சட்டம் 19/1976.

30–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச்சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1976ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் 30–Aஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவிற்கான வகைமுறையில் ‘‘ஏழு ஆண்டுகள்" என்ற சொற்றொடருக்காக, ‘‘பத்து ஆண்டுகள்" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

செல்லுந்தன்மை.

3. முதன்மைச் சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், 2019ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18ஆம் நாளன்று தொடங்கும் மற்றும் ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்தச்சட்டம் வெளியிடப்படும் தேதியுடன் முடிவடையும் காலத்தின் போது, ஈரோட்டிலுள்ள சிக்கய்ய நாயக்கர் கல்லூரியின் மேலாண்மையினை அரசால் எடுத்துக் கொள்ளுதல் தொடர்ந்திருக்கையில் மற்றும் கூறப்பட்ட காலத்தின்போது, கூறப்பட்ட கல்லூரியின் மேலாண்மையினை எடுத்துக் கொண்டது தொடர்ந்திருப்பதற்கு, அரசால் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செல்லுந்தன்மையுடன் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

1976ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவருடைய சட்டம் 19/1976) 30ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவானது, கல்லூரிக் கல்வியின் நலனைக் கருத்தில் கொண்டு, தொடக்கத்தில் இரண்டாண்டுகள் காலஅளவிற்கும், எனினும் பத்து ஆண்டுகளுக்கு மிகாது நீட்டிக்கப்படலாகும் ஒரு காலஅளவு வரையிலும், தனியார் கல்லூரி ஒன்றின் மேலாண்மையினை எடுத்துக் கொள்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. அதேபோல், கூறப்பட்ட சட்டத்தின் 30–Aஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவானது, உரிமையியல் நீதிமன்றமொன்றில் நிலுவையில் இருக்கும் கல்வி முகமையின் அமைப்பு தொடர்பான பூசல் ஒன்றின் காரணத்திற்காக, தனியார் கல்லூரியின் கல்வி முகமையிடம் மேலாண்மையினை மீட்டு கொடுக்க முடியாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலையில் அல்லது அத்தகைய தனியார் கல்லூரியின் சொத்தின் உடைமையை அளிக்க வேண்டிய நபரை கண்டறிய முடியாமல் போகின்றவிடத்து அல்லது, அத்தகைய பிற காரணங்களுக்காக, கூறப்பட்ட காலஅளவான பத்து ஆண்டுகள் முடிவடைந்த பிறகு, மேலும் ஓர் ஆண்டு காலஅளவிற்கும், எனினும் ஏழாண்டுகளுக்கு மிகாது நீட்டிக்கப்படலாகும் ஒரு காலஅளவு வரையிலும், அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட தனியார் கல்லூரியின் மேலாண்மையானது தொடர்ந்து இருப்பதற்காக வகைசெய்கிறது.

3. தனியார் கல்லூரி ஒன்றின், அதாவது, ஈரோட்டிலுள்ள சிக்கய்ய நாயக்கர் கல்லூரியின் மேலாண்மையானது, கூறப்பட்ட குடியரசுத் தலைவருடைய சட்டம் 19/1976ன் 30ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கூறப்பட்ட குடியரசுத் தலைவருடைய சட்டம் 19/1976ன் 30–Aஆம் பிரிவின்படி கூறப்பட்ட கல்லூரியின் மேலாண்மையானது, அரசின் தொடர்ச்சியான மேலாண்மையின் கீழ் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு சட்டம் 9/2019ன்படி திருத்தம் செய்யப்பட்டவாறான, கூறப்பட்ட குடியரசுத் தலைவருடைய சட்டம் 19/1976ன் 30–Aஆம் பிரிவின்படி, குறிப்பிடப்பட்ட ஏழாண்டுகள் என்ற காலஅளவானது 18.12.2019 அன்று முடிவடைந்து விட்டது.

4. இதன்பின்பு, கூறப்பட்ட கல்லூரியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், பொது நலனிற்காகவும், கூறப்பட்ட கல்லூரியானது, உரிமை மாற்றம் செய்யப்பட்டு அரசிடம் ஒப்படைவு செய்யப்படலாம் எனக் கருதப்பட்டது. அதற்கிணங்கியவாறு, 2022ஆம் ஆண்டு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவானது (ச.பே.ச.மு எண்.16/2022), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்டு, அவ்வாறு சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டமுன்வடிவானது மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக, மாண்புமிகு ஆளுநரால் அனுப்பப்பட்டுள்ளது. மேற்கூறிய முன்மொழியப்பட்ட சட்டத்தின் மூலம், கூறப்பட்ட கல்லூரியானது உரிமை மாற்றம் செய்யப்பட்டு அரசிடம் ஒப்படைவு செய்யப்படும் வரையில், கூறப்பட்ட கல்லூரியானது அரசின் மேலாண்மையின் கீழ் தொடரலாம் எனக் கருதப்பட்டது. 2019ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18ஆம் நாளுக்குப் பிறகும் கூறப்பட்ட கல்லூரி மற்றும் அத்தகைய பிற கல்லூரிகள் எதனின் மேலாண்மையை தொடர்ச்சியாக எடுத்துக் கொண்டமையை செல்லத்தக்கதாக ஆக்குவதற்கும், கூறப்பட்ட குடியரசுத் தலைவருடைய சட்டம் 19/1976ன் கூறப்பட்ட 30–Aஆம் பிரிவினை தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

5. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் க. பொன்முடி,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 18.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 51/2022**

**2018ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 7/2018.

2ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டத்தின் 2ஆம் பிரிவில்,—

(1) (*a*) எனும் கூறானது, (*aa*) எனும் கூறாக மறுஎழுத்திடப்படுதல் வேண்டும் மற்றும் (*aa*) எனும் கூறானது அவ்வாறு மறுஎழுத்திடப்படுவதற்கு முன்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

(*a*) "ஒப்புகைச் சான்றிதழ்" என்பது 11A—ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (*a*) கூறின் கீழ் ஒருங்கிணைப்பு முகமையினால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் என்று பொருள்படும்;";

(2) (*l*) கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(*l*) "தொழில் வழிகாட்டி" என்பது மாநிலத்தில், தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கு வசதியாக அரசால் உருவாக்கப்பட்ட மற்றும் 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களை பதிவு செய்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கம் என்று பொருள்படும்;';

(3) (*r*) கூறிற்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(*rr*) "அறிவிக்கை செய்யப்பட்ட நிறுவனம்" என்பது அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படலாகிறவாறான நிறுவனம் அல்லது நிறுவனத்தின் வகை அல்லது இனம் எதுவும் என்று பொருள்படும்.".

3ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 3ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில், "தொழில் வழிகாட்டி நிறுவனம்" எனும் சொற்றொடருக்காக, "தொழில் வழிகாட்டி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

4ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 4ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில் (i) ஆம் இனத்தின் இறுதியில் பின்வரும் சொற்றொடரானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"மற்றும் 11A—ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (*a*) கூறின் கீழ் ஒப்புகைச் சான்றிதழ் வழங்குதல்;".

5ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 5ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில், ''அனுமதிகளுக்கான விண்ணப்பம்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது ஒப்புகைச் சான்றிதழ் வழங்குதல்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

9ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 9ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில், ''இயல் வடிவம் அல்லது மின்னணு வடிவம் ஆகிய இரண்டில் ஏதேனும் ஒரு வடிவத்தில் எதிலும்'' எனும் சொற்றொடருக்காக, ''மின்னணு வடிவத்தில்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

11Aஎனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டத்தின் 11ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது, உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''11A. ஒப்புகைச் சான்றிதழ்.— (1) ஒரு புதிய நடவடிக்கையை தொடங்குவதற்கோ அல்லது அதன் நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்யக்கருதுகிற, அறிவிக்கை செய்யப்பட்ட நிறுவனம் எதுவும், ஒற்றைச் சாளர வலைவாயில் வழியாக, தற்சான்றிதழுடன் கூடிய ஒருங்கிணைந்த விண்ணப்பப்படிவத்தையும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்தையும் சமர்ப்பிக்கலாம்.

(2) (a) (1)ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து, ஒருங்கிணைந்த விண்ணப்பப் படிவம் ஒன்று பெறப்பட்டதன் பேரில், ஒருங்கிணைப்பு முகமையானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் படிவத்திலும் அத்தகைய கால வரம்பிற்குள்ளும் விண்ணப்பதாரருக்கு ஒப்புகைச் சான்றிதழ் ஒன்றினை வழங்குதல் வேண்டும்;

(b) (a)—கூறின் கீழ் வழங்கப்பட்ட ஓர் ஒப்புகைச் சான்றிதழானது அனைத்து நோக்கங்களுக்காக, அரசால் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய அனுமதிகளுக்காக, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் காலத்திற்காக, 2ஆம் பிரிவின் (c) கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான அனுமதியைப் போன்ற செயல்விளைவைக் கொண்டிருத்தல் வேண்டும். மூன்று ஆண்டுகள் காலம் முடிவடைவதற்கு முன்னர், அத்தகைய நிறுவனமானது தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிடமிருந்து அனுமதிகளைப் பெறுதல் வேண்டும்;

(c) தற்சான்றிதழை மீறும் ஏதேனும் நிகழ்வில், ஒப்புகைச் சான்றிதழானது ஒருங்கிணைப்பு முகமையினால் ரத்து செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, விண்ணப்பதாரருக்கு கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தாலன்றி அத்தகைய ரத்தானது செய்யப்படுதலாகாது.''.

15ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. முதன்மைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல்—துணைத் தலைவரை தலைவராகவும், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயலாளரை கூட்டுநர் உறுப்பினராகவும்'' எனும் சொற்றொடருக்காக, ''தொழில் வழிகாட்டியின் மேலாண் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவரை தலைவராகவும், தொழில் வழிகாட்டியின் செயல் இயக்குநரை கூட்டுநர் உறுப்பினராகவும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

2018ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 7/2018) மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, தொழில் நிறுவனத்தை நிறுவுவதற்காகவோ அல்லது விரிவுபடுத்துவதற்காகவோ விண்ணப்பங்களின் மீது கால இலக்குடன் நடவடிக்கையினை மேற்கொள்வதற்காகவும் பல்வேறு தகுதிவாய்ந்த அதிகார அமைப்புகளால் அனுமதிகளை வழங்குவதற்காகவும், மேலும் மாநிலத்தில் முதலீட்டாளர்களின் உகந்த சூழ்நிலைக்காகவும் இயற்றப்பட்டது.

2. 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13ஆம் நாளன்று, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், சட்டமன்றப் பேரவையில் 2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு–செலவு கணக்கைத் தாக்கல் செய்யும்போது, முதல் மூன்று ஆண்டுகளுக்கு பல்வேறு மாநிலச் சட்டங்களின் கீழ் ஆய்வுகளின்றியும், அனுமதிகளைப் பெறாமலும், தற்சான்றிதழின் அடிப்படையில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளடங்கலாக புதிய தொழில் துறை அலகுகளை நிறுவுவதற்கும், செயல்படுத்துவதற்கும் 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமானது திருத்தம் செய்யப்படுமென அறிவித்தார். மேற்சொன்ன அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு, 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 7/2018) தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**தங்கம் தென்னரசு,**
*தொழில் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 18.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 52/2022**

1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1998.

2ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவில்,—

(1) (aa) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“(aa) “உள்நாட்டு தொழில் நிறுவனம்” என்பது மாநிலத்திற்குள் சரக்குகளை தயாரிக்கின்ற அல்லது உற்பத்தி செய்கின்றதும் அல்லது சேவைகளை வழங்குகின்ற அல்லது அளிக்கின்றதுமான, மற்றும் 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்படுத்துதல் சட்டத்தின் (மையச்சட்டம் 27/2006) 7ஆம் பிரிவின் (1)ஆம் கூறின் கீழ் மைய அரசினால் அறிவிக்கப்படலாகும் குறு அல்லது சிறு தொழில் நிறுவனமாக தகுதி பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகளை நிறைவு செய்கின்றதுமான, மாநிலத்திற்குள் அமைந்துள்ள தொழில் நிறுவனம் எதுவும் என்று பொருள்படும்.”;

(2) அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட (aa) கூறுக்குப்பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(aaa) பட்டியல் இனத்தவர் அல்லது பட்டியல் பழங்குடியினருக்குச் சொந்தமான உள்நாட்டு தொழில் நிறுவனம்" என்பது,—

(i) பட்டியல் இனத்தவர் அல்லது பட்டியல் பழங்குடியினரைச் சேர்ந்த நபர் எவருக்கும் சொந்தமான மாநிலத்தில் அமைந்துள்ள உள்நாட்டு தொழில் நிறுவனம் எதுவும்; அல்லது

(ii) பட்டியல் இனத்தவர் அல்லது பட்டியல் பழங்குடியினரைச் சேர்ந்த பங்குதாரர்களை நான்கில்—மூன்று பங்கிற்கும் குறையாத, மாநிலத்தில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் வணிகம் செய்யும் இடத்தினைக் கொண்டுள்ள நிறுவனமான அல்லது வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மையான உள்நாட்டு தொழில் நிறுவனம் எதுவும்; அல்லது

(iii) மாநிலத்தில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் வணிகம் செய்யும் இடத்தினைக் கொண்டுள்ள நிறுமமான உள்நாட்டு தொழில் நிறுவனம் எதுவும் என்று பொருள்படும்;";

(1) பட்டியல் இனத்தவர் அல்லது பட்டியல் பழங்குடியினரைச் சார்ந்த நபர்களுக்கு உரித்தாயிருக்கிற சாதாரண பங்குகளை ஐம்பது விழுக்காட்டிற்கும் அதிகமாகக் கொண்டிருக்குமிடத்து; மற்றும்

(2) 2013 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின், (மையச்சட்டம் 18/2013) 2 (27) ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டவாறான நிறுவனத்தின் கட்டுப்பாடானது, பட்டியல் இனத்தவர் அல்லது பட்டியல் பழங்குடியினரைச் சார்ந்த நபர்களுடன் உற்றமைந்திருக்குமிடத்து;";

(3) (ee) கூறானது, (eee) எனும் கூறாக மறுஎழுத்திடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு மறுஎழுத்திடப்பட்ட (eee) கூறுக்கு முன்னர், பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(ee) "பட்டியல் இனத்தவர்" மற்றும் "பட்டியல் பழங்குடியினர்" என்பது அரசியலமைப்பின் 366 ஆம் உறுப்பின் (24) மற்றும் (25) கூறுகளின் கீழ் முறையே, அதற்கென குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.";

(4) (eee) கூறுக்குப்பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது;—

"(eeee) "மாநிலம்" என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்".

10ஆம் பிரிவிற்கான திருத்தம்

3. முதன்மைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், மூன்றாம் வகைமுறைக்குப் பின்பு, பின்வரும் வகைமுறையானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:—

"மேலும் வரம்புரையாக, ஒப்பந்தப்புள்ளி ஏற்பு அதிகார அமைப்பானது, பட்டியல் இனத்தவர் அல்லது பட்டியல் பழங்குடியினருக்குச் சொந்தமான உள்நாட்டு தொழில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய நிபந்தனைகளை நிறைவு செய்வதன் பேரில், அவர்களால் தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் மற்றும் வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட சேவைகள் ஆகியவற்றைப் பொருத்து குறைவான ஒப்பந்தப்புள்ளியாக அல்லாதவாறும், அத்தகைய நிறுவனங்கள் குறைவான ஒப்பந்தப்புள்ளியின் விலையினை நிகர் செய்திட விரும்பினால், அந்தக் கொள்முதலின் மொத்தத் தேவையின் ஐந்து விழுக்காட்டளவிற்கும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.".

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 43/1998) பொதுக்கொள்முதலில் வெளிப்படைத் தன்மைக்காகவும், ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்பதற்கு மற்றும் ஏற்பதற்குமான நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும் இயற்றப்பட்டது.

2. பொதுக் கொள்முதலில், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினரைச் சார்ந்த நபர்களுக்குச் சொந்தமான குறு மற்றும் சிறு நிறுவனங்களின் பங்கேற்பினைத் தூண்டுவதற்கும், ஊக்குவிப்பதற்கும் கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 43/1998–ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்,**
*நிதி மற்றும் மனிதவள*
*மேலாண்மைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 18.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.